## திராவிட இயக்க இதழ்கள் - 'முரசொலி'

'திராவிட இயக்கத்தின் விடிவெள்ளி' முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் தொடங்கிய இதழ், 'முரசொலி'. இது 1942-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 10 அன்று துண்டறிக்கை வடிவில் வெளியானது. அது இரண்டாம் உலகப் போர் காலம். எனவே காகிதம் கிடைப்பது சிக்கலாக இருந்ததால், அந்த இதழ் துண்டறிக்கையாக வெளிவந்தது. பின்னர், வார இதழாக வளர்ந்து, நாளிதழாக மலர்ந்திருக்கிறது.

பெரும்பாலும், கலைஞர் சிந்தனைகளைத் தாங்கி வரும் கட்டுரைகள், கவிதைகள், கடிதங்கள் ஆகியவைதான் அதிக அளவில் இந்த இதழில் வெளிவந்தன. பிறகு, கழகத்தின் மூத்த நிர்வாகிகள் முதல் கடைமட்டத் தொண்டர்கள் வரை, தங்கள் படைப்புகளை 'முரசொலி'யில் வெளியிட்டு அழகு பார்த்தனர்.

இன்று அந்த இதழ், இளைஞர்களை நோக்கி, அவர்களின் உள்ளத்தில் கழகத்தின் சிந்தனைகளை, கொள்கைகளை, கழக வரலாறு ஆகியவற்றை விதைக்க, அதன் கடைசிப் பக்கம் 'பாசறைப் பக்க'மாக வந்துகொண்டிருக்கிறது.

மேடையில் பேசி, கட்சி வளர்த்தவர்கள், தங்கள் எழுத்துகள் மூலம் மக்கள் மனங்களோடு பேச வந்தபோது, அதற்கு அவர்கள் தேர்ந்தெடுத்த கருவியே இதழ்கள். அந்தக் கருவியை மிகச் சரியாகவும் சிறப்பாகவும் கையாண்டவர்கள் என்று மூன்று முக்கியமான திராவிட இயக்கத் தலைவர்களைச் சொல்லலாம். தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோர்தான் அந்த மூவர். இவர்களில் பெரியார் அவர்கள் நடத்திய 'குடிஅரசு' இதழ், இன்று பல தொகுப்புகளாக வந்துள்ளன. அதேபோல 'விடுதலை', 'உண்மை' ஆகிய இதழ்கள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன. போலவே கலைஞரின் 'முரசொலி'யும் 83 ஆண்டுகளாகத் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது.

"இந்த வெற்றிக்குக் காரணம், 'முரசொலி'யை வெறும் இதழாக மட்டுமே நடத்தாமல், அதனை ஓர் அறக்கட்டளையாக மாற்றியதே" என்று கலைஞரே பேட்டி ஒன்றில் சொல்லியிருக்கிறார். கலைஞரின் தொலைநோக்குப் பார்வைக்கு 'முரசொலி'யும் ஓர் எடுத்துக்காட்டு..!

## ஃப்ளாஷ்பேக்





கார்த்திக் கே.செல்வராஜ்

### கோடி கொடுத்தார், கொடி காத்தார்!

1993-ஆம் ஆண்டு கழகத்திற்குச் சோதனை ஏற்பட்டபோது, கோவையில் கழக முன்னோடிகள் சி.டி. தண்டபாணி, கோவை மு.ராமநாதன், பொங்கலூர் பழனிச்சாமி, க.ரா.சுப்பையன் ஆகியோர், தலைவர் கலைஞர் அவர்களை கோவைக்கு அழைத்து வந்து, வ.உ.சி மைதானத்தில் பிரமாண்ட பொதுக்கூட்டம் நடத்தினர். அப்போது கழக வளர்ச்சி நிதியாக ரூ.1 கோடி நிதி வழங்கினர். அப்போது கோவை மாநகரம் 48-வது வட்டத்தின் செயலாளராக இருந்த நான், ரூ.1 லட்சத்து 10 ஆயிரம் நிதி வசூலித்து கொடுத்தமைக்கு, தலைவர் கலைஞர் அவர்கள் ஒரு பவுன் தங்க மோதிரம் எனக்கு அணிவித்தார். படத்தில், அப்போதைய மாநகரச் செயலாளர் சி.டி.தண்டபாணி, மாநகரப் பொருளாளர் க.ரா.சுப்பையன், பகுதிச் செயலாளர் ஜெ.சிராஜுதீன். விழாவில் பேசிய தலைவர் கலைஞர், "கோடி கொடுத்தார், கொடி காத்தார்" என்று நிர்வாகிகளை வாழ்த்திப் பேசினார்.

**- கார்த்திக் கே.செல்வராஜ், மாமன்ற உறுப்பினர், ஆர்.எஸ்.புரம் பகுதிக் கழகச் செயலாளர், கோவை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473
மின்னஞ்சல் : youthwing@dmk.in

## கருவூலம்

### அண்ணா கண்ட கலைவிழா!

1951-ஆம் ஆண்டு மார்ச் 15 முதல் 21 வரை காஞ்சிபுரத்தில் கலை விழா நடத்தினார் அண்ணா. காஞ்சி, பச்சையப்பன் கல்லூரி நிதிக்காக நடத்தப்பட்ட இந்த விழாவில், அண்ணாவின் 'ஓர் இரவு', 'வேலைக்காரி', எஸ்.ஏ.சாமியின் 'துளி விஷம்', கு.சா.கிருஷ்ணமூர்த்தியின் 'அந்தமான் கைதி' உள்ளிட்ட பல்வேறு நாடகங்கள் நடிக்கப்பட்டன. இக்கலைவிழாவின் மூலம் கிடைத்த 21,000 ரூபாயை, பச்சையப்பன் அறநிலையத் தலைவர் சடகோபனிடம் ஒப்படைத்தார் அண்ணா.

## மாநாடு

ர.பிரகாசு 46

**திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...**

ஓவியம் : சிகரன்




# வழிகாட்டுகிறது, விருதுநகர்!

இராமநாதபுரம் மாவட்ட 2-வது மாநாடு 1953 ஜூன் 27, 28 ஆகிய தேதிகளில் விருதுநகரில் நடைபெற்றது. முதல் நாள் பெண்கள் முன்னேற்ற மாநாடும், இரண்டாம் நாள் அரசியல் மாநாடும் நடைபெற்றன. பெண்கள் மாநாட்டுக்கு ஏ.வி.பி.ஆசைத்தம்பியின் மனைவி பரமேசுவரி வரவேற்புக் குழுச் செயலாளராக இருந்தார். அப்போது, விருதுநகர் நகர சபையின் துணைத் தலைவராக இருந்த ராஜம்மாள், மாநாட்டின் வரவேற்புக் குழுத் தலைவராகப் பணியாற்றினார். பெண்கள் மாநாட்டின் தலைவராக அருண்மொழி பொறுப்பேற்றிருந்தார்.

திருவனந்தபுரத்தைச் சேர்ந்த அன்னி மஸ்கரேன், மாநாட்டைத் திறந்துவைக்க, மூவலூர் இராமாமிர்தம் அம்மையார், அன்னை சத்தியவாணிமுத்து, டாக்டர். தருமாம்பாள், தாமரைக்கண்ணி, பொற்செல்வி, இலாரன்ஸ், நாவலர் இரா.நெடுஞ்செழியன் ஆகியோர் கருத்துரையாற்றினர். திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது தாய்மார்கள் கொண்டிருந்த ஆர்வத்தையும், கழக இலட்சியங்களில் குடும்பத்தாரை ஈடுபடுத்த வேண்டுமென்ற கழகத் தொண்டர்களின் ஆவலையும் இம்மாநாடு வெளிக்காட்டியது. மாநாட்டில் பெண்களின் கூட்டம், தி.மு. கழகத்திற்கு மகளிர் ஆதரவு பெருகி வருவதை வெளிப்படுத்தியது.

மறுநாள், அரசியல் மாநாட்டிற்கு சிவ. சண்முகசுந்தரன் வரவேற்புரை ஆற்ற, எம்.எஸ்.சிவசாமி தொடங்கி வைத்தார். என்.எஸ்.இளங்கோ தலைமை தாங்கினார். இரண்டாவது நாள் மாநாட்டில் எண்ணற்ற புதிய தொண்டர்கள் கூடியிருந்தனர். என்.வி.நடராசன், இரா.சு.தங்கப்பழம், நடிகர் எம்.ஜி.ஆர், ஈ.வி.கே. சம்பத் ஆகியோர் இரண்டாவது நாளில் சொற்பொழிவாற்றினர். இறுதியாக, பேரறிஞர் அண்ணா பேருரையாற்றினார்.

**இராமநாதபுரம் மாவட்டத்தில், நமது கொள்கைகளைப் பரப்பும், வீரக்காளைகளையும், வீராங்கனைகளையும், கண்டோம் - விழிகளில் பெருமிதமும் அவர்தம் மொழிகளில் குதூகலமும் பெருகிடக் கண்டோம்.**

முதல் நாள் 'ஜமீன் மாளிகை' எனும் நாடகமும், இரண்டாம் நாள் 'ஓர் இரவு' நாடகமும் நடைபெற்றன. இரண்டு தினங்களிலும் செல்வா, பெருமாள் தேவன்பட்டி கலை மன்றத்தாரின் 'திராவிடம்' வில்லுப் பாட்டு முதலிய இசை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. 'ஓர் இரவு' நாடகத்திற்குத் தலைமை வகித்துப் பேசிய கே.ஆர். இராமசாமி, 'திராவிட முன்னேற்றக் கழகம் பணம் படைத்தோரிடம் சென்று பணம் திரட்டி, கட்சிக் காரியத்தைச் செய்து வரவில்லை. திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள், கழக வளர்ச்சிக்கு ஓயாது உழைக்கிறார்கள். நாடகத் துறையிலும் உழைத்துப் பணம் திரட்டி, திரட்டிய பணத்தைப் பொதுமக்களின் நல்லறிவுப் பிரச்சாரத்துக்கே பயன்படுத்து கிறார்கள்' என்று கழகத்தின் நிதி நிலைமையை விவரித்துப் பேசினார்.

'அரசாங்கத்தின் அலட்சியத்துக்கு ஆட்பட்டுக்கிடப்பதும், பஞ்சம், பட்டினி, பாசனமின்மை முதலிய கேடுகளால் இருண்ட வாழ்வுக்குள் நைந்து மெலிவதுமான இராமநாதபுரம் மாவட்டத்தில், நமது கொள்கைகளைப் பரப்பும், வீரக்காளைகளையும், வீராங்கனைகளையும், கண்டோம்- விழிகளில் பெருமிதமும் அவர்தம் மொழிகளில் குதூகலமும் பெருகிடக் கண்டோம். மாநாட்டை வெற்றிகரமாக நடத்தி முடித்த அனைவரையும் 'திராவிட நாடு' அன்புள்ளத்துடன் பாராட்டுகிறது! வாழ்க, செயல்வீரர்கள்!' என மகிழ்ச்சியை வெளிப்படுத்தியது 'திராவிட நாடு' ஏடு.'வழிகாட்டுகிறது, விருதுநகர்' என்று வாழ்த்தியது 'நம்நாடு' தலையங்கம். ஆம், பெண்களுக்கு அரசியல் வழிகாட்டியது.

**...கூட்டம் திரளும்**

## பாசறை படிப்பறை


கௌதம் ராஜ் 46

**"புத்தகத்தில் உலகைப் படிப்போம், உலகத்தையே புத்தகமாய்ப் படிப்போம்" என்றார் முத்தமிழறிஞர் கலைஞர். அப்படி சுயமரியாதை-சமத்துவம்-சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**

# அடித்தள மக்களின் அரசியல் இயக்கம்!

சமகால அரசியலில் குறிப்பாக, திராவிட இயக்கம் பற்றிய தத்துவத்தையும் கோட்பாடுகளையும் அடித்தளமாகக் கொண்டு வெகுஜன இதழ்களில் கட்டுரைகளை எழுதி வருபவர் புதுடெல்லியிலுள்ள டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பணிபுரியும் ராஜன் குறை அவர்கள். அண்மையில், ரவீந்திரன் ஸ்ரீராமச்சந்திரன், சுபகுணராஜன் ஆகியோருடன் இணைந்து, தி.மு.கவின் 1949-1967 காலகட்ட அரசியல் மாற்றங்களை, 'RULE OF THE COMMONER' என்ற தலைப்பில் நூலாக்கி இருந்தார்.

'திராவிடம் என்ற கோட்பாடு' பற்றியும் திராவிட இயக்கத்தின் அரசியல் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டும் 'மின்னம்பலம்' இணையதளத்தில் அவர் எழுதிய கட்டுரைகள் தொகுக்கப்பட்டு 'திராவிடவியம்: அரசியல் தத்துவமும் மக்களாட்சி வரலாறும்' என்ற தலைப்பில் நூலாக வெளிவந்திருக்கிறது. 10 கட்டுரைகளைக் கொண்ட சிறிய நூல்தான் என்றாலும், பல்வேறு விவாதங்களுக்கு நிறைவான பதில்களை வழங்கும் செறிவுமிக்கத் தொகுப்பாக இந்நூல் வெளியாகி இருக்கிறது. 'மின்னம்பலம் பதிப்பகம்' இந்நூலை வெளியிட்டிருக்கிறது.




பேராசிரியர் சுப.வீர பாண்டியன் இந்நூலுக்கு எழுதியுள்ள அணிந்துரையில் 'இன்றுவரையில் திட்டமிட்டுத் தொடர்ந்து கொண்டிருக்கும் திராவிட இயக்க எதிர்ப்புக் குரல்களை முறியடிக்கும் ஆயுதமாக வெளி வந்திருக்கிறது இந்நூல்!' என்று குறிப்பிடுகிறார்.

'திராவிடவியம்' என்பது ஆரியம் நம் மீது திணித்த வர்ண தர்மத்தை எதிர்த்து, ஒரு கூட்டாட்சிக் குடியரசை சாமானிய மக்களைக் கொண்டு நிறுவ முயன்றது என்பது, அனைத்துக் கட்டுரைகளின் அடிநாதமாக இருக்கிறது. தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோர் வகுத்த அரசியல் பாதையில் இன்றைக்கு, திராவிட இயக்கம் பயணிப்பதைக் கவனப்படுத்துகிறார்.

'தமிழ் வேண்டும் திராவிடம் வேண்டாம்' என்று தொடர்ந்து முழங்கும் ஆரியத்தின் ஏவலர்களுக்கு இதில் உள்ள ஒரு கட்டுரை பதில் அளிக்கிறது, 'திராவிட-தமிழர்' என்ற உணர்வை மக்களிடையே ஏற்படுத்தி அரசியல் எழுச்சி பெறச் செய்த கட்சி தி.மு.கழகம் என்பதை ஆணித்தரமாக நிறுவுகிறது இந்தக் கட்டுரை.

'கூட்டாட்சிக் குடியரசு என்பது கூட்டுக்குடும்பமா? குடியிருப்பு வளாகமா?' என்ற கட்டுரை தமிழ்நாடு போன்ற பொருளாதார வளம் மிக்க தென் மாநிலங்களின் வரி, பகிர்வென்று வருகையில், ஒன்றிய அரசால் தொடர்ந்து வஞ்சிக்கப்படுவதைச் சுட்டிக் காட்டி எழுதப்பட்டுள்ளது. மாநிலங்களுக்கு அதிக பொருளாதார நிதி மேலாண்மை உரிமைகளைப் பகிர்ந்தளிப்பதன் மூலம்தான் கூட்டாட்சிக் குடியரசு நீண்டகால நோக்கில் பலனளிக்கும்' என்று இக்கட்டுரை வாதிடுகிறது.

விக்கிரவாண்டி இடைத்தேர்தல், 2024-மக்களவைத் தேர்தல் என தி.மு.கழகம் தொடர் வெற்றிகளைக் குவித்ததற்குப் பின்னுள்ள அரசியலையும் கருத்தியலையும் விவரிக்கும் கட்டுரைகளும் இதில் அடங்கும்.

மாநில உரிமைகளுக்காகக் குரல் எழுப்புவதிலும் தி.மு.கழகம் பெற்றிருக்கும் முக்கியத்துவத்தை இந்திய ஒன்றிய அரசியலின் எதிர் காலத்திற்கு அவசியமானது என்ற கட்டுரையுடன் இந்தத் தொகுப்பு நிறைவு பெறுகிறது. 'திராவிடவியம்' என்ற கோட்பாட்டின் சமகால போக்கைக் கருத்தில் கொண்டு எழுதப்பட்டிருக்கும் இந்நூல் கழகத்தவர் அனைவரும் படித்தறிய வேண்டிய தொகுப்பாக வெளியாகி இருக்கிறது.

**...வாசிப்போம்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம்

720

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131